REGD. No. M. 63 ★ தனி இதழ் 1 அணா ★ PHONE: 5563

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 22௳ சனி (8—10—55) ★ ★ வெளியீடு: புரட்டாசி 23௳ ஞாயிறு (9—10—55) [இதழ் 99

ஒரு இலட்சம் தற்காப்பிலாக்கா ஊழியர் வேலைநிறுத்தம்!

பூனா, அக். 7—

தற்காப்பு இலாக்காவைச் சேர்ந்த ஊழியர்கள் சுமார் ஒரு இலட்சம் பேர், வரும் அக்டோபர் 20-ந் தேதியன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வர் என்று தெரிகிறது. இந்தத் தகவலை வெளியிட்ட அகில இந்திய தற்காப்பிலாக்கா ஊழியர் சங்கத் துணைச் செயலாளரான பி. என். ராஜ் ஹான்ஸ் என்பவர், தொழிலாளர்களை, குறிப்பாக, தொழிற் சங்க ஊழியர்களைப் பழி வாங்கும் முயற்சியில் நிர்வாகிகள் ஈடுபடுவதை எதிர்ப்பதற்காகவே இந்த அடையாள வேலை நிறுத்தம் என்று கூறியிருக்கிறாராம்.

'தொழிலாளர் நலனுக்கு உழைப்பது தி. மு. கழகமே'

தொழிற் சங்கத் தலைவர் பக்கிரிசாமி எம்.எல்.ஏ. கருத்து

சென்னை, அக். 8—

திராவிட முன்னேற்றக் கழகம், அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள எல்லா மக்களின் விடுதலைக்குமாகப் பாடுபடும் விடுதலை இயக்கம் என்பதை நாடறியும்—நல்லறிவாளர் அறிவர்; அந்தக் கருத்தினைத் தொழிற் சங்கத் தலைவர் தோழர் எஸ். பக்கிரிசாமி(பிள்ளை) எம். எல். ஏ., அவர்கள் நேற்றையக் கூட்டத்தில் வெளியிட்டிருக்கிறார்.

நேற்று மாலை, சென்னை-கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்தில், சென்னை மாநில கைத்தறி நெசவாளர் சங்கச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய தோழர் எஸ். பக்கிரிசாமி(பிள்ளை) எம். எல். ஏ., அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"இன்றைய காங்கிரஸ் ஆட்சி முதலாளிகள் ஆட்சியேயாகும்; அந்தக் காங்கிரஸ் ஆட்சி, தொழிலாளர் வர்க்கத்தவருக்கு எவ்வித நன்மையும் செய்ய முன்வரவில்லை—முன்வரும் நிலையிலும் இல்லை.

"திராவிட முன்னேற்றக் கழகம், தனது கட்சியை அரும்பாடுபட்டு வளர்ந்து, தொழிலாளர்களின் துயர் துடைக்கப் பாடுபட்டு வருகிறது. நாட்டில் இன்று எத்தனையோ கட்சிகள் மறைந்து கொண்டும்—மறையும் தருவாயிலும் இருந்து வருகின்றன. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமோ, தொழிலாளர்—பாட்டாளி மக்களின் முன்னேற்றத்திற்காகப் பணியாற்றி வருவதை உணரும்போதுதான், அந்தக் கட்சியின் மாநாட்டிற்காக, சென்னை மாநில கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் சங்கச் சார்பில் நிதியளிக்கவும் முன்வந்துள்ளோம். மேலும் இன்றைய நிலையில், தொழிலாளி—ஏழைமக்கட்குப் பணிபுரியும் நிலையில் உள்ள கட்சி ஒன்றுண்டானால் அது திராவிட முன்னேற்றக் கழகமே ஆகும்.

"எனவே, திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தொழிலாளர்கள் ஒத்துழைப்பும் ஆதரவும் கொடுக்கவேண்டியது மிகவும் இன்றியமையாததும், அவசியமானதுமாகும். அது மட்டுமல்ல; சர்க்காரை எதிர்க்கிற ஒரு பலமான கட்சியினால்தான், அந்த சர்க்காரால் நன்மை கிடைக்காத மக்களுக்குப் பக்க பலமும், நன்மையும் கிடைக்கும் அந்த முறையில், தொழிலாளர்களுக்கு — அவர்களுடைய நன்மைக்காகத் தீவிரமாகப் பணியாற்றி, சர்க்காருக்கு எதிராகவும் மிகுந்த பலமிக்க ஒரு கட்சியாகவும் அமைந்துள்ளதால்தான் தி. மு. கழகம், தொழிலாளர் தோழர்களின் நன்மைக்காக முழு மூச்சுடன் போராடிவரும் இயக்கமாகும்."

அடுத்துத் தோழர் தி.வி. முத்துகிருஷ்ணன் பேசுகையில், "கைநெசவுத் தொழிலாளர்களுக்கும், மற்றுமுள்ள பலதிறப்பட்ட தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள இன்னல்களை எடுத்துக்கூறி, அதற்குப் பரிகாரம் தேடும் ஆக்க வேலைகளில் ஈடுபடுவது திராவிட முன்னேற்றக் கழகம்தான்," என்று கூறினார்.

'கைத்தறி நெசவாளர் வாழ்வுபெற திராவிடம் விடுதலை பெற வேண்டும்'

சென்னைப் பொதுக்கூட்டத்தில் சிற்றரசு, நடராசன் முழக்கம்

கைத்தறி நெசவாளர் சங்கம் மாநில மாநாட்டிற்கு நிதியளிப்பு

"அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலெல்லாம்கூட, நமது நாட்டின் கைத்தறித் துணியின் மீதுள்ள 'கிராக்கி' அதிகமாகிக்கொண்டே வரும் செய்தியை நாம் படித்துக்கொண்டே வருகிறோம். இப்படிப்பட்ட நிலையில் நமது நாடு மட்டும் ஒரு தனிச் சுதந்திர நாடாக இருந்தால்—வடவரின் அடிமைத்தனத்திற்கு ஆளாக்கப்படாமல் சுயஉரிமையுடைய சர்க்காரைக் கொண்ட நாடாக இருக்குமானால் எவ்வளவு பெருமை கிடைக்கும். நம்முடைய நாட்டின் தொழிலாளர்களுக்கு—அவர்களது தொழில் திறமையால் செய்யப்படும் கைநெசவுத் துணிகளுக்கு, விதவிதமான துணிகளைக் கண்டனுபவித்த நாட்டிலே ஆதரவு அதிகமதிகமாகப் பெருகிவருகிறது; அந்நாடுகளிலெல்லாம் நமது நாட்டுத் துணிகளுக்குத் தேவை அதிகரித்து வருகிறது; இவ்வளவு இருந்தும், நாம், நம்முடைய சொந்த முறையில் எதும் செய்வதற்கு இயலாதிருக்கிறது.

"இன்றைக்கு அமெரிக்கா போன்ற பிற நாடுகளில் நமது துணிகளுக்கு நல்ல ஆதரவு கிடைக்கச் செய்ய வேண்டுமானால்கூட அதற்கான அதிகாரம் நம்மிடம் இல்லை; இறக்குமதி—ஏற்றுமதி இலாகா நம் கையில் இல்லை. எனவே, நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள நமக்கு உரிமை இல்லை; அந்த உரிமையை மாற்றாரிடம் கொடுத்துவிட்டிருக்கிறோம்.

"நமது நாட்டுத் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நமக்குத் தனி உரிமை இல்லை—உரிமை பறிக்கப்பட்டிருக்கிறோம்! நாம் நம்முடைய வறுமை நிலையினின்றும் மீண்டு வாழ்வு பெற, மற்ற நாடுகளுடன் வியாபாரம் போன்ற துறைகளில் தொடர்பு கொண்டாக வேண்டும்; அந்தத் தொடர்பினை நாம் அடைய வேண்டுமானால், நாம் நமக்கென தனி நாடு பெற்றிருப்பவர்களாக இருக்க வேண்டும்; அந்த நாடு நமது சொந்த அதிகாரத்தின் கீழ் இருக்க வேண்டும். எனவேதான், திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாங்கள் திராவிட நாட்டுப் பிரிவினை அவசியம் எனக் கோருகிறோம்."

இவ்வாறு, தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், 7—10—55-ல், சென்னை கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்தில், சென்னை மாநில கைத்தறி நெசவாளர் சங்கச் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்.

சென்னை மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில், சென்னை கான்ரான்ஸ்மித் நகர் மைதானத்தில், தோழர் பக்கிரிசாமி பிள்ளை எம். எல். ஏ., தலைமையில் 7—10—55 அன்று மாலை பொதுக் கூட்டம் நடைபெற்றது. தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் சி. பி. சிற்றரசு, தி. வி. முத்துகிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். துணைப் பொதுச் செயலாளர் அவர்கட்கும், தோழர் சி. பி. சிற்றரசு அவர்கட்கும் மேற்படி சங்கச் சார்பில் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

★

மாநிலமாநாட்டுக்கு நிதி

தி. மு. கழக மாநில மாநாட்டிற்காக, துணைப் பொதுச் செயலாளர் அவர்களிடம், சங்கச் செயலாளர் அவர்களால் ரூ. 27–15–9 கொடுக்கப்பட்டது.

துணைப் பொதுச் செயலாளர் அவர்கள், மாநில மாநாட்டுக்கு நிதி உதவி அளித்த மேற்படி சங்கத்தவரைப் பாராட்டியும், தொழிலாளர் குறைகள் குறித்தும் அரிய தோர் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்திற்கு ஆயிரக்கணக்கில் பொதுமக்கள் கூடியிருந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

கோவா தேசியவாதிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம்

ஒருவர் படுகாயமுற்றார்

கோவா எல்லை, அக். 7—

கோவா தேசிய மாநாட்டு ஊழியர் ஒருவர் மீது கோவா போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து அவரைப் படுகாயப்படுத்தியிருக்கின்றனர் என்று இங்கு செய்தி எட்டியிருக்கிறது.

சில தொண்டர்கள் கிராமம் ஒன்றில் சுவரொட்டிகள் சிலவற்றை கடந்த 5-ந் தேதியன்று, ஒட்டிக் கொண்டிருக்கும்போது போலீசார் மூன்று முறை சுட்டனராம்.

* * *

டையூ, டாமன் திட்டுகளின் கவர்னர்கள் முக்கியமான ஆலோசனைக்காக கோவாவிற்கு அழைக்கப்பட்டிருக்கின்றனராம்.

திரு-கொச்சி ஆற்றுநீர்

சென்னை மத்திய சர்க்கார் உதவியை நாடும்

சென்னை, அக். 7—

திரு-கொச்சி எல்லையோர ஆற்று நீரை சென்னை பயன்படுத்திக் கொள்வது பற்றி இந்திய சர்க்காரின் உதவியை, சென்னை சர்க்கார் நாடும் என்று தெரிகிறது.

திரு - கொச்சியில் இப்போது நிலவும் சூழ்நிலைகளில், இரு மாநிலங்களும் இது குறித்து நேரடியாகப் பேசி முடிவுக்கு வருவது இயலாததாகவே தெரியவருவதால்தான், மத்திய சர்க்காரின் உதவி நாடப்படுகிறதாம்.

கொலை, கொள்ளை புரிந்த பள்ளித் தலைமை ஆசிரியர்

ஜப்பானில் 'இரட்டை வாழ்க்கை' நடத்தியவர்

டோக்கியோ, அக். 7—

இரட்டை வாழ்க்கை நடத்திய ஆரம்பப்பள்ளி தலைமை ஆசிரியர் ஒருவரை போலீசார் கைது செய்திருக்கின்றனர்.

40 வயதான அந்த தலைமை ஆசிரியர், தான், இரண்டு கொலைகள் புரிந்ததாகவும், இரண்டு முறை கொள்ளையடித்ததாகவும், 12 முறை தாக்குதல் நடத்தியதாகவும், 69 முறை திருடியதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறார். அவர் கடந்த 5 ஆண்டுக் காலமாக இந்தத் திருடுதல், கொலை புரிதல், கொள்ளையடித்தல் ஆகிய குற்றம் புரியும் வாழ்க்கையை மேற்கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

ஒருமுறை இவர் ஜப்பான் மக்கள்சபை உறுப்பினர் ஒருவர் வீட்டில் புகுந்து, ரொக்கமாக 2 20,000 யென் (ரூ. 2,900) திருடியதுடன், 1,50,000 யென் (ரூ. 2,000) பெறுமான புகைப் படக்கருவி ஒன்றையும் திருடி வந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

மழை பெய்யும் இரவுகளிலும், சனிக்கிழமைகளிலும் அந்த தலைமை ஆசிரியர் இந்த குற்றம் புரியும் தொழிலில் ஈடுபடுவாராம். அவர் தான் திருடியவற்றை தனது வீட்டிலும் பள்ளியிலும் மறைத்து வைத்திருந்தாராம்.

மலேயாவில் நெருக்கடி நிலை ஒழிய!

கம்யூனிஸ்டுகள் ஒத்துழைப்பர்?

கோலாலம்பூர்—

"கம்யூனிஸ்டுகள் ஆயுதங்களை வீசி எறிந்துவிட்டு மலேயாவில் அமைதி நிலவுவதற்கு ஒத்துழைப்பார்கள் என நம்புகிறேன்"

என்று, முதன் மந்திரி தெங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்திருக்கிறார்.

மலேயா கம்யூனிஸ்டு கட்சிப் பொதுச் செயலாளரான சின்பெங், தனக்கு எழுதியுள்ள கடிதம் உண்மையானதுதான் என்று தான் எண்ணுவதாக, நாட்டு மக்களிடை வானொலி மூலம் பேசிய அவர் தெரிவித்திருக்கிறார்.

தாம் கம்யூனிஸ்டு செயலாளரைச் சந்திக்க ஒப்புதல் தந்திருப்பதாயும், அவரிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சர்க்கார் வெளியிட்ட பொது மன்னிப்பு அறிவிப்பிற்கு நல்ல ஆதரவு கிடைத்திருப்பதாயும், இதுவரை 21 பேர் சரணடைந்திருப்பதாயும் ரஹ்மான் தெரிவித்திருக்கிறார்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம்

தேவையான நிலம் பெற ஏற்பாடு

புதுடில்லி, அக். 7—

தென்னாற்காடு மாவட்டம், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்டத்திற்காக சுமார் 7,700 ஏகர் நிலம், 'ஆர்ஜிதம்' செய்ய வேண்டியுள்ளது என்றும், இதற்காக இந்தியப் பேரரசு சென்னை சர்க்காருக்கு ரூ. 40 லட்சம் பணம் தந்துள்ளது என்றும், 16 கிராமங்கள் முழுவதுமாக 'ஆர்ஜிதம்' செய்யப்பட வேண்டியிருக்கும் என்றும் தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 8—10—'55 சனி

ஒரு அறைகூவல்!

★

தென்னுப்பிரிக்காவில் குடியேறிய வெள்ளை இனத்தவர், அந்த நாட்டில் பெற்றுள்ள ஆதிக்கத்தின் விளைவாக, அந்த நாட்டுக்குரிய குடிமக்களான ஆப்பிரிக்கர்களையும், இதர வெள்ளையரல்லாத குடியேற்றக் காரர்களையும் படுத்தி வரும் கொடுமைகள் சொல்லுந்தரமன்று! 'நிறவெறி தலைக்கேறிய கொடுமைக் குணாளன்' என்று அந்த நாட்டின் பிரதம மந்திரியாயிருந்த மலான், பெயர் பெற்றிருந்தார்; இப்போது, அவருக்குப் பின் பதவிப் பொறுப்பிலிருப்போர், மலான் செய்து வந்த கொடுமைகள், ஆடிவந்த நிறவெறித் தாண்டவங்கள் இவற்றின் தரத்தையும், சுருங்கக் கூறின்—வெள்ளையர்கள் சுட்டிக்காட்டும் உணவைத்தான் ஆப்பிரிக்க மக்கள் உண்ண வேண்டும்; 'வாழு' என்று கட்டளையிட்ட இடத்தில்தான் வாழவேண்டும்; 'செய்' என்று சொன்ன வேலையைத்தான் செய்யவேண்டும்—என்ற முழு அடிமை நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் கொடுமைகளைக் கண்டு, 'நாகரீகம் பெற்றவர்' என்று கூறி, 'அவர்கள் எங்கள் வெள்ளை இனத்தவரே' என்று உறவு கொண்டாடும் உலகின் வேறு பாகங்களில் வாழும் வெள்ளையர் வெட்கித் தலைகுனியக் காணோம்!

இந்தியத் துணைக் கண்டத்

'தமிழ் நாடு உள்ளிட்ட திராவிடம் தனிச் சுதந்திர நாடாகத்தான்போகிறது'

'இந்தி எந்த உருவத்திலும் திராவிடத்திற்குத் தேவையில்லை'

சட்ட சபையில் எம். பி. சுப்பிரமணியம் முழக்கம்

"எது எப்படி இருந்தாலும், தமிழ் நாடு உள்ளிட்ட திராவிடம் தனிச் சுதந்திர நாடாக ஆகத்தான் போகிறது—ஆகவேண்டும்—ஆக முடியும் என்ற நம்பிக்கைகொண்ட வாலிபர்கள் தமிழ் நாட்டில் நாள்தோறும் ஆயிரக்கணக்கில் பெருகிக்கொண்டு வருகிறார்கள்—என்ற உண்மையை யாரும் மறந்துவிடக்கூடாது; ஆகவே, இந்த அடிப்படையில் பெரும் நம்பிக்கை வைத்துப் பாடுபட்டுவரும் நாங்கள், 'இந்தி எந்த உருவத்திலும்—தன்மையிலும், நம் நாட்டிற்கு அவசியமில்லை—கூடாது' எனக் கருதுகிறோம்."

—இவ்வாறு தோழர் எம். பி. சுப்பிரமணியம் எல். எல். ஏ., அவர்கள் 29—9—55ல் நடைபெற்ற சென்னை சட்ட சபைக் கூட்டத்தில், இந்தி அலுவல் மொழிக் குழுவின் விஞத்தான் பற்றி நடைபெற்ற விவாதத்தின் மீது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்சொன்னதாவது:—

"இந்தி, மத்திய அரசாங்க மொழியாக இருக்கவேண்டுமென்பதற்காக இந்தச் சபை தன்னுடைய அபிப்பிராயத்தை சொல்ல வாய்ப்பளிக்கப்பட்டிருக்கிறது; இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நன்றாகக் கவனிக்க வேண்டியது, 'இந்தியை அரசாங்க மொழியாக ஏற்படுத்த முடியுமா?' என்பதே; இந்தி, இந்தியாவின் ஒரே தேசீய மொழியல்ல; 'பதினைன்கு தேசீய மொழிகளில் இந்தியும் ஒன்று' என்று, இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பது கவனத்திற்குரியது. நிதியமைச்சர் உள்பட பலர் இதைத் தெளிவாக்கியிருக்கிறார்கள்; ஆனாலும், இன்று பேசிய ஒரு உறுப்பினர் ஈறாக, டில்லி மக்கள் சபைத் தலைவர்

"ஆங்கிலம், 150 ஆண்டு காலத்திற்கு முன் நம்மை ஆண்ட வெள்ளைக்காரரால்—அவர்களது வசதிக்காகவும், 'ஆங்கில ஆட்சிப் பண்பாட்டில் நமக்கு ஒரு பற்று உண்டாக வேண்டும்' என்ற குறிக்கோள்களாலும் நம்மீது திணிக்கப்பட்ட: போதிலும்கூட, உலக நாடுகளில், பல துறைகளில் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்ள மற்ற எந்த மொழியைக் காட்டிலும் ஆங்கிலமே வெகுவாக ஒப்புக்கொள்ளப்பட்டு, பயன்பட்டு வருகிறது. தொழில் துறை, விஞ்ஞானத் துறை இவைகளில் இந்தியா, இருநூற்றாண்டுகளாக, மேலை நாடுகளைவிடப் பின்தங்கி இருப்பதால், விஞ்ஞானத் துறையில் நாளுக்கு நாள் ஏற்பட்டுவரும் புதுமைகளையும், தொழில் நுட்பங்களையும் அறிவதற்கு ஆங்கிலம் இன்றியமையாததாகிறது; ஆகவே, ஆங்கிலம் இன்னும் பல ஆண்டுகளுக்கு நாம் எல்லோரும் கட்டாயம் படிக்கவேண்டிய மொழியாக இருக்க வேண்டுமென்பதை யாரும் மறுக்க முடியாது.

"இந்தியையும், ஒவ்வொருவரும்,

இந்தி மொழி பற்றி மீண்டும் பண்டிதர்

...னதையே திரும்பச் சொல்கிறார்

...தி திணிக்கப்படுவதாகத் ...ட்டில் பரவலான எண் ...நிலவி வருகிறது; நான் ...எண்ணங்கொண்டோ ...த் தெளிவாகச் சொல்ல ...புகிறேன்—இந்தி எவர் ...கட்டாயமாகத் திணிக்கப் ...ட்டாது;

...அரசியல் சட்டத்தில், ...மொழிகள் தேசீய மொழி ...ஏற்றுக்கொள்ளப்பட் ...கின்றன; இந்தி, அலுவல் ...ழியாக ஏற்கப்பட்டிருக்கி ...—அதாவது, ஆங்கிலம் ...இடத்தில் ஒரு இந்திய ...இருக்க வேண்டுமென்ப ...து, மிகப் பொருத்தமான ...ழியாக இந்தி இருந்தது; ...ல், இந்தி மொழிக்கும்— ...டம், தமிழ், தெலுங்கு ...ன்ற மொழிகளுக்கும் ...தல்—என்பது பொரு ...; எல்லா இந்திய மொழி ...வேகமாக அபிவிருத்தி ...ந்து வருகின்றன; அந்த ...ழிகள் எல்லாம் போதனை ...ழிகளாகி வருகின்றன; ...லம அலுவல் மொழியாக ...து வருகிறது; அதற்குப் ...க இந்தி, அலுவல் மொழி ...படிப்படியாக மேற்கொள் ...வேண்டும்;

...லேயே, நாம் ஆங்கிலம் ...கொள்வதை விட்டுவிட ...டும்—என்று கூறுவதாக ...க வேண்டாம்; நாம் ...ர்ந்து ஆங்கிலம் படித்தாக ...டும்; ஒரு பெரிய நாட்ட ...ன்ற முறையில் நாம், சர்வ ...அரசியல், வர்த்தகம், வியா ..., விஞ்ஞானம், தொழில் ...ன்ற பல துறைகளில் ...வேண்டியவர்களாயிருக் ...ம்; எனவே, பல வெளி ...மொழிகள் அறிந்தவர் ...மக்கு நிரம்பத் தேவைப் ...ன்றனர்; எனவே, நான் ...லத்தை எதிர்ப்பவனல்ல; ..., அந்த அந்நியமொழியை ...நமது அலுவல் மொழி ...ஏற்றுக்கொள்வது பெரு ...குறைவானதாகும்,"

...பண்டித நேரு, சென்னை ...தெரிவித்த கருத்தை ஒட் ...பங்களூரிலும் தெரிவித்தி ...ர்.

...14-ந் தேதி ஏற்படப் ...புதிய மேற்கு பாகிஸ்தான் ...த்திற்கு எம். ஏ. குர்மானி ...ாக நியமிக்கப்பட்டிருக்

மட்டுந்தான் இந்தியாவின் தேசிய மொழி எனப் பொருள்பட பேசி வருகிறார்கள். இவர்களெல்லாம் அரசியல் சட்டத்தை அறியாதவர்கள் எனக்கூற முடியாது. வேண்டுமென்றே மக்களிடத்தில் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருவதன் நோக்கம், இந்தியையே இந்தியத்துணைக்கண்டத்தின் ஒரே தேசீய மொழியாகவும், ஆதிக்க மொழியாகவும் கொண்டுவந்துவிட வேண்டுமென்பதைத் தவிர வேறு ஒன்றும் இல்லை.

"ஆகவே இப்பொழுது, இந்தி, மத்திய அரசாங்க மொழியாக இருக்கவேண்டியது அவசியமெனபதையே நாம் ஆலோசிக்க வேண்டும். 'தமிழ்நாடோ, மற்ற எந்தப் பகுதியோ, தனித்துச் சுதந்திர நாடாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் இந்தப் பிரச்சினையை அணுகக் கூடாது; இது அதற்குப் பொருத்தமான சமயமல்ல' என அமைச்சர் கூறியுள்ளார். 'திராவிட நாடு' என்னும் சொல்லைச் சொல்ல அமைச்சர் வெட்கப்படுகிறார், அல்லது விரும்பவில்லை போலும்!

"இந்தி மத்திய அரசாங்கத்திற்கும்—மாநில அரசாங்கங்களுக்கும் இடையிலும், மாநிலங்களுக்கிடையிலும் பொது மொழியாக இருக்கவேண்டுமெனக் கூறப்படுகிறது; அதோடு வெளிநாட்டுடன் தொடர்பு கொள்ள — விஞ்ஞான அறிவைப் பெற—தொழிலதுறை நுட்பங்களைத் தெரிந்துகொள்ள ஆங்கிலமும் கற்றுக்கொள்ளவேண்டும் எனக்கூறப்படுகிறது; இவைகளோடு, வட்டாரமொழியும அவசியம்; ஆகவே, இம்மூன்று மொழிகளையும்ணவட்டார மொழி, இந்தி, ஆங்கிலம் — ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டியதாகிறது.

"தமிழ், இனி, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் கல்லூரிகளில் கற்பிக்கப்படும் மொழியாகவும், சட்ட மன்றத்தில்—நீதி மன்றங்களில் — அரசாங்க அலுவலகங்களில் உபயோகிக்கப்படும் மொழியாகவும் இருக்கும்—இருக்க வேண்டும் என்பதை யாரும் மறுக்கமாட்டார்களென எண்ணுகிறேன்.

நேருவுக்கு யோசனை?

சென்னை, அக். 6—

'மக்கள் சபைக்கு தமிழ்நாட்டுத் தொகுதி ஒன்றிலிருந்து அடுத்த பொதுத்தேர்தலில் போட்டியிட உத்தேசித்திருக்கிறீர்களா?' என்று, விமான நிலையத்தில், பண்டித நேரு கேட்கப்பட்டபோது, 'எனக்குத் தெரியாது; அதுவும் ஒரு புதிய யோசனை தான்,' என்று பதிலிறுத்திருக்கிறார்.

...காக கற்க வேண்டியதுதானே? தமிழும், ஆங்கிலமும் அவசியமெனக் கொண்ட பிறகு, மூன்றாவது மொழியாக இந்தியையும் கற்கவேண்டிய அவசியம் என்ன? இந்தியா ஒரே நாடாக இருக்கும் வரையில் மத்திய, மாநில சர்க்கார்களுக்கிடையே பொதுமொழி அவசியம் என்றாலும், அது இந்தி மொழியாகத்தான் இருக்கவேண்டுமா?

"ஆங்கில மொழியைக் கொண்டே, ஆங்கிலம் எந்தத் தேவைகளுக்காக வேண்டுமென்று கூறப்பட்டதோ — அவைகளோடு இந்தி எந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அவசியம் என்று கருதுகிறோமோ — அந்தத் தேவைகளை ஆங்கிலத்தாலேயே பூர்த்தி செய்துகொள்ள முடியும்; ஆனால் இந்தியைக் கொண்டு, ஆங்கிலத்தினால் பூர்த்தி செய்யப்படும தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாது; ஆகவே ஆங்கிலமும், அந்தந்த வட்டார மொழியுமே போதுமானதென்ற முடிவுக்கு வர வேண்டும்.

"மொழி, மொழிக்காகக் கற்கப்படுவதில்லை; மொழியினால் பூர்த்தி செய்யப்படும் தேவைகளை முன்னிட்டே மனிதன் மொழிகளைக் கற்கிறான். அப்படிப் பார்க்கும்பொழுது, எவ்வளவு குறைவான மொழிகளைக் கற்றால் போதுமோ அவ்வளவு மட்டும் கற்று, நேரத்தையும், ஆற்றலையும் சேமித்து, மற்றப் பயனுள்ள காரியங்களில் ஈடுபடலாம்; எனவே, நமக்கு இந்தி மொழி தேவையில்லை; சிறுவர்கள் மூன்று மொழிகள் கற்க வேண்டிய இடத்தில், இரண்டு மொழிகள் கற்றாலே போதுமானது என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

"இந்தி, உத்தியோக மொழியாக இருப்பதற்கு வேண்டிய தகுதி பெற்றிருக்கிறதா என்றால், மற்ற எந்த இந்திய மொழியைக் காட்டிலும், இந்தி அதிகப்படியான மக்களால் புரிந்துகொள்ளப்படுகிறது— என்ற ஒரே காரணத்தைத் தவிர வேறு எத்தகை சிறப்புக்களும் கொண்டில்லாதது.

"ஐரோப்பாவில் சுவிட்சர்லாந்து நாட்டில், ஜெர்மானிய மொழியைப் பேசுபவர்கள் 100-க்கு 72 பேர் ஆவார்கள்; ஆனாலும்கூட, ஜெர்மானிய மொழியை மட்டுமே ஆட்சி மொழியாக ஆக்காமல், சிறுபான்மையோரால் பேசப்படும் பிரெஞ்சு, இத்தாலி ஆகிய இரு மொழிகளையும் ஜெர்மானிய மொழியோடு ஆட்சி

(4-ம் பக்கம் பார்க்க.)

உயர்த்திக்கொண்டே வருகின்றனர்.

சில தினங்கட்கு முன்பு, தென்னுப்பிரிக்க தொழிலாளர் மந்திரியாயிருப்பவர் 'தேசீயக் கட்சி, அமைக்க உத்தேசித்து பகிரங்கமாகத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் 'குடியரசி'ல் நிச்சயமாக வெள்ளையரல்லாத எவருக்கும் வாக்குரிமை இருக்காது,' என்று நெஞ்சழுத்தத்துடன் தெரிவித்திருக்கிறார்.

தென் ஆப்பிரிக்காவில் மிகப் பெரும்பான்மையினர் ஆப்பிரிக்கர்கள்; குடியேறிய வெள்ளையரின் எண்ணிக்கை மிகக் குறைவு; ஆனால், அந்த வெள்ளையரைத் தவிர, வேறு எவருக்கும்—இந்தியர் உட்படத்தான் —'வாக்குரிமை' இருக்காதாம்! அப்படிப் பெரும்பான்மைக் குடிமக்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாது அமைக்கவிருக்கும் ஒரு அரசு முறைக்குக் 'குடியரசு' என்று வேறு, அவர் பெயர் தந்திருக்கிறார்.

ஏற்கனவே, அங்கு, ஆப்பிரிக்கர்களை வெள்ளையர் நடத்தி வரும் முறை உலகப் பிரசித்தமானது.

ஆப்பிரிக்கர்களில் எழுபத்து ஐந்து சதவிகிதத்தினர் குடிசைகளில் மனிதப் புழுக்களாய் நெளிந்து கொண்டிருக்கின்றனர்.

அவர்கள் வெள்ளையர் வாழும் பகுதிக்குள் காலெடுத்து வைக்கவும் கூடாது; தன்மானத்துடன் வாழ வேண்டும் என்று நினைக்கக் கூடாது; வெள்ளையர் எத்தனை நிந்தனை செய்தாலும் புன்சிரிப்புடன் அவற்றைத் தாங்கிக்கொள்ள வேண்டுமே தவிர, எதிர்க்கக் கூடாது;தங்களுக்கு பிரியமான வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடியாது; வெள்ளையர் காலால் இட்ட வேலையை தலையால் செய்து முடிக்க வேண்டும்; 'கல்வி கற்கவேண்டும்' என்று கோரினால், 'கறுப்பனே உனக்குக் கல்வி வேறு கேடா?' என்ற பதிலைத்தான் வெள்ளையர் தருவர்; ஆப்பிரிக்க மக்கள், தங்கள் சொந்த நாட்டிலேயே தாங்கள் விரும்பும் இடங்களில் சுதந்திரமாகச் சுற்றித்திரிய முடியாது!

...டாதவனே; நீ எங்களைத் தொட்டுவிட்டால், உன் பாதம் இத்தெருவில் பட்டுவிட்டால் தீட்டு—பாபம்,' என்று, தங்களைப் பிறப்பால் உயர்ந்தவர் என்று கூறித் திரியும் பார்ப்பனரும் இரண்டு மூன்று தலைமுறைக்கு முன்னர்—பல கிராமப்புறங்களில் இன்னமும் கூடத்தான் — கூறிவந்ததை— கூறி வருவதைப் போன்றுதான், ஆப்பிரிக்காவில் வெள்ளையர், நீக்ரோ மக்களை நடத்தி வருகின்றனர்; அவர்களும் மக்கள்தான் — நல்ல உள்ளமும், நுண்ணிய உணர்வும் கொண்டவர்கள்தான் என்பதை, ஏற்று மதிக்க மறுத்து வருகின்றனர்.

ஏற்கனவே புரிந்துவரும் இந்த மனிதத்தன்மையற்ற அநியாயங்கள் போதாது என்று, இப்போது," 'குடியரசு அமைக்கப் போகிறோம் — ஆனால், அதில் பெரும்பாலான ஆப்பிரிக்கக் குடிமக்களுக்கு வாக்குரிமை இருக்காது"—என்ற போக்கில் வெள்ளையர் செயல்பட்டு வருவது, உலகெங்கணுமுள்ள நாகரீகமும், மனித உள்ளமும் கொண்ட மக்களுக்குத் தரப்படும் அறைகூவலாகும்.

வழக்கம்போல, மீண்டும் ஐ. நா. சபை, ஆப்பிரிக்காவில் தாண்டவமாடும் நிறவெறித் திமிர் குறித்துப் பேசக்கூடும்; ஆனால், ஏற்கனவே தென்னுப்பிரிக்க வெள்ளையர் சர்க்கார், தாங்கள் ஐ. நா. நடவடிக்கைகளுக்கு மதிப்பளிக்கப் போவதில்லை—என்று, தெளிவாகத் தெரிவித்துவிட்டிருக்கின்றனர்.

இந்த நிலையில், அமையப் போகும் 'குடியரசி'ல், தங்கள் உள்ளத்துஉணர்வை உணர்த்துவதற்குத் தங்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில், பெரும்பான்மைக் குடிமக்களான ஆப்பிரிக்கர்கள், தங்கள் நியாயமான உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ள தங்களுக்கு அமைதியான ஜனநாயக வழிகள் இருப்பதாக எண்ண இடமில்லை. எப்படித்தான் ஆப்பிரிக்கரும், இதர வெள்ளையரல்லாத குடியேற்றக்காரர்களும் தங்களது வெகு நியாயமான உரிமைகளை நிலைநாட்டிக்கொள்ளப் போகின்றனர் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.

திராவிடத்தில் விளையும் 'இஞ்சிப் புல்' அமெரிக்காவுக்கு ஏற்றுமதி!

போர்க் காலத்தில் விஞ்ஞானிகள் அதனைக் கையாண்ட முறை வெளியாகிறது!

உடல் வளத்திற்கும், நறுமணம் ஊட்டுவதற்கும் பயன்படும் முறைகள் பற்றி விளக்கம்

ஒடைக்காலி (திருவாங்கூர்)— நியூயார்க்கிலும், லண்டனிலும், பாரிசிலும் விற்கப்படும் சிறந்த வாசனைத் தைலங்களில் சில, வட திருவாங்கூரிலுள்ள குன்றுகளிலும், பள்ளத்தாக்குகளிலும் வளரும் ஒருவகை சாதாரணப் புல்லைக் கொண்டு செய்தவையாகும்.

'இஞ்சிப் புல்' என்று சொல்லப்படும் இந்தப் புல், எந்தக் காற்றடித்தாலும், எவருமே கவனிக்காவிட்டாலும் ஏராளமாக வளர்ந்துள்ளது. வாசனைத் தைலங்கள் செய்வோருக்குப் பயன்படும் தைலம் அதிலிருந்து கிடைக்கிறது; சோப், தைலம் முதலியவற்றிற்கு நறுமணம் ஊட்டுவதற்கு இந்தப் புல் தைலத்தைப் பயன்படுத்துகிறார்.

இந்திய-அமெரிக்க உறவும் இந்தத் தைலத்தால் வன்மை பெறுகிறது; இந்தியாவிலிருந்து இந்தப் புல் தைலத்தை அதிகமாக வாங்கும் நாடு அமெரிக்காவே!

சில ஆண்டுகளாக இந்தப் புல் தைல ஏற்றுமதி அதிகமாகிக் கொண்டே போகிறது. ஒரு கோடி ரூபாய்க்கு அதிகமான மதிப்புள்ள 736 டன் புல் தைலம் 1954-ல், அமெரிக்காவுக்கு ஏற்றுமதியாகியிருக்கிறது.

அமெரிக்க விஞ்ஞானிகள் போர்க் காலத்தில் கண்டுபிடித்த முறைப்படி, 'ஏ' வைட்டமினைச் செயற்கை முறையில் உற்பத்தி செய்வதற்கு, 1954-ல், இந்தத் தைலத்தை உபயோகிக்கத் தொடங்கியதால், இது இங்கிருந்து அதிகமாக ஏற்றுமதி செய்யப்பட்டது.

'காட்லிவர், எண்ணெயும், கடலில் 'காட்' மீனும் கிடைக்கும் போது, 'ஏ' வைட்டமினைச் செயற்கை முறையில் உற்பத்தி செய்வது விநோதமாகத் தோன்றலாம்; ஆனால், காட்லிவர் எண்ணெயில் அருவருப்பான நாற்றம் உண்டு; அது, இந்தச் செயற்கை 'ஏ' வைட்டமினில் இல்லாததே, இம்முறையில் 'ஏ' வைட்டமின் உற்பத்தி செய்வதற்குக் காரணமாகும்.

இந்தப் புல் தைலத்தை ஏற்றுமதி செய்யுமுன், மருந்துத் தைலங்கள் செய்வதற்கு அதனைப் பயன்படுத்தினார்கள். மேலும், அது பூச்சிகளைக் கொல்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. கொசுக்கள் கடிக்காதபடி உடம்பில் அதனைப் பூசுவதும் உண்டு. மண் வேலிகள் பலமாயிருப்பதற்காக விவசாயிகள் இந்தப் புல்லை நடுவதும் உண்டு.

வளமிகுந்த வட திருவாங்கூரில், 35,000 ஏக்கரில், இந்தப் புல் வளர்கிறது; சோடை மழை விழுந்தவுடன் இதனை விதைக்கிறார்கள்; ஐந்து மாதத்தில் அதை முதல் முறையாக அறுக்கலாம்; அதன்பின் இரசாயன உரம் போடுகிறார்கள்; அது மிகவும் விரைவாய் வளர்கிறது; மாதத்திற்கு ஒருமுறை அதை அறுக்கிறார்கள்; அவ்வாறு ஆறு வருடம் அறுத்துக் கொண்டிருக்கலாம்; அதன் ஆயுள் ஆறு வருடம்.

"திருவாங்கூரில் இந்தப் புல்லிலிருந்து எண்ணெய் பிழியும் 2,000 ஆலைகள் உள்ளன; தண்ணீரில் புல்லைப் போட்டுக் காய்ச்சி, நீராவியைக் குளிர வைத்து தைலம் எடுக்கப்படுகிறது; அதைக் கொச்சித் துறைமுகத்துக்கு அனுப்புகிறோம்" என்கிறார், 'இஞ்சிப் புல்' வியாபாரி டி ஒ அப்துல்லா.

தென்மேற்குக் கடற்கரைப் பகுதியின் பொருளாதாரத்துக்கும் இந்தப் புல்லால் நன்மை விளைவதை அரசாங்கம் அறிந்து, இந்தக் காட்டுப் புல்லை விஞ்ஞான முறையில் வளர்ப்பதற்கு ஆராய்ச்சி நடத்துகிறது.

வடதிருவாங்கூரிலுள்ள ஒடைக்காலி என்னும் இடத்தில் ஒரு ஆராய்ச்சி நிலையம் நிறுவப் பெற்றுள்ளது; 20 ஏக்கர் நிலத்தில், இந்தப் புல்லின் எல்லா வகைகளும் சோதனைக்காக வளர்க்கப்படுகின்றன; அந்த நிலத்தின் ஒரு ஓரத்தில் சோதனைக்கூடம் இருக்கிறது.

எனவே, இந்தப் புல், சிறந்த வாசனைத் தைலம் செய்யப் பயன்படுகிறது; காட்லிவர் எண்ணெயைக் குடிப்பதற்கு விரும்பாத சிறுவர்களுக்கு, இந்தத் தைலத்தால் செய்யப்படும் 'ஏ' வைட்டமின் கிடைக்கிறது; கொசுத் தொல்லையை இது நீர்க்கிறது; வேதனையைப் போக்க வைத்தியருக்கு இது உதவுகிறது.

வேலையற்றோர் பதிவு எண்ணிக்கை

ஆகஸ்டுதிங்களில் வளர்ந்துள்ளது

புதுடில்லி, அக். 7— வேலை தேடித் தரும் நிலையங்களில், வேலை உதவி கோரி புதிதாகப் பெயர்ப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1955 ஜூலை திங்களில் 1,57,446 ஆக இருந்தது—1955 ஆகஸ்டு திங்களில் 1,41,068 ஆகக்குறைந்து விட்டது. பெயர்ப் பதிவு, ஜூலை திங்களில், பரீட்சை முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து மிகவும் அதிகமாக இருந்தது. இக்காலத்தில் இதுபோன்று உயர்வு ஏற்படுவது சாதாரணமாகும்.

ஆகஸ்டுதிங்கள்இறுதியில் வேலை உதவி நாடியிருந்த வேலையில்லாதவர்களின் மொத்த எண்ணிக்கை, பெயர்ப் பதிவுகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டதின் காரணமாக, முந்திய திங்களிலிருந்ததைக்காட்டிலும் ஏறக்குறைய 17,500 உயர்ந்து, திங்கள் இறுதியில் 6,83,632 ஆக இருந்தது.

எருக்கஞ்சேரி பால் பண்ணை

சென்னை சர்க்காரின் முயற்சி

சென்னை, அக். 5— சென்னையை அடுத்த எருக்கஞ்சேரியில் பால்காரர்களுக்கான ஒரு குடியிருப்பு ஏற்படுத்துவது பற்றித் திட்டங்கள் வகுப்பதைத் துரிதப்படுத்துவதற்காகப் பல்வேறு இலாகாக்களின் தலைமை அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை சர்க்கார் நியமித்துள்ளனர் என்று தெரிய வருகிறது.

எருக்கஞ்சேரி பால்காரர் குடியிருப்பு சீக்கிரமே அமைவதற்கான நடவடிக்கைகளை குழு மேற்கொள்ளும் என்று தெரிய வருகிறது.

ஏற்றுமதி செய்த நாடு இறக்குமதி செய்கிறது

அமெரிக்காவின் இன்றைய நிலை பற்றி ஒரு கண்ணோட்டம்

உலகத்திலேயே அதிகமாக உணவுப் பொருள் விளையும் நாடாகிய அமெரிக்கா, உணவுப் பொருள் இறக்குமதியிலும் உலகில் முதன்மை பெற்று வருகிறது.

வகை வகையான உணவும், மணங் கமழும் உணவும் வேண்டுமென்னும் ஆர்வம் அமெரிக்கருக்கு வளரவளர, வெளிநாட்டு உணவுப் பொருள் இறக்குமதியும் கூடுகிறது.

அமெரிக்கர் பலர் வெளிநாடுகளுக்குச் சென்றபோது, அங்கு உண்ட உணவு வகைகளைத் தம் தாய் நாட்டிலும் விரும்புகின்றனர்.

அமெரிக்க இறக்குமதிச் சரக்குகளில் ஏறக்குறைய மூன்றில் ஒன்று, உணவுப் பொருள்களேயாகும்.

அமெரிக்கப் பல சரக்குக் கடைக்காரர்கள், தாங்கள் விற்கும் பொருள்களில் நூற்றுக்கு 8 முதல் 10 பங்குவரை வெளிநாட்டு இறக்குமதி உணவுப் பொருள்களே என்று சொல்லுகின்றனர்.

வெப்ப நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குக் காப்பியும், தேயிலையும், கொக்கோவும், வாழைப்பழமும், கரு மிளகும், வாசனைத் திரவியங்களும் வருகின்றன; இவையே, அமெரிக்க நாட்டில் இறக்குமதியாகும் உணவுப் பொருள்களில் பாதிக்கு மேலாகும்.

பக்குவப்படுத்திய இறைச்சி, ஒலிவ் எண்ணெய், சர்க்கரை, மீன், பேரீச்சம்பழம், வெள்ளைப்பூண்டு, பிராந்தி, விஸ்கி முதலியவையும் முக்கியமாக இறக்குமதியாகின்றன.

இந்த ஆண்டின் முதல் மூன்று மாத காலத்தில், காப்பி—45,05,000-பையும், தேயிலை—4,37,00,000 ராத்தலும், கொக்கோ—67,636 டன்னும் இறக்குமதியாயின; சென்ற ஆண்டு இதே காலத்தில், இவை இன்னும் அதிகமாக இறக்குமதியாயின.

ஆண்டுதோறும் அமெரிக்கர் உபயோகிக்கும் வாசனைத் திரவியங்கள் இப்பொழுது சுமார் 15 கோடி ராத்தல் என அமெரிக்க வாசனைத் திரவியக் கழகம் கூறுகிறது. அநேக பல சரக்குக் கடைகளில் இன்று ஏறக்குறைய 50 வகையான வாசனைத் திரவியங்களைக் காணலாம். இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்னர், அக்கடைகளில், இரண்டு டஜன் வகைகள்கூட இல்லை.

அமெரிக்கர், வெளிநாடுகளிலிருந்து 'பாலடைக் கட்டி'யையும் முக்கியமாக இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளனர்; அமெரிக்காவின் 'பாலடைக் கட்டி' இறக்குமதியாளர் சங்கத்தில், இன்று, 110 கம்பெனிகளுக்கு மேல் சேர்ந்திருக்கின்றன.

'இலக்கியப் பாரம்பரியம் இந்திக்கு உண்டா?'

'உலக விவகாரங்களுடன் தொடர்பு கொள்ள ஆங்கிலம் இல்லாமல் முடியாது'

'தினமலர்' தரும் விளக்கம்

"இந்தியாவில் பெரும் பகுதியினர் இந்தி பேசி வருகின்றனர் என்பதைத் தவிர, இந்திக்கு எந்தவித அடிப்படைப் பலமும் கிடையாது;

"இலக்கியப் பாரம்பரியம் கொண்டதாகவோ, கலை வளர்ச்சி அடைந்ததாகவோ உள்ள ஒரு மொழி அல்ல இந்தி; ஆனால், எப்படியோ அம்மொழி பெரும் பகுதியினரின் தாய் மொழியாக வந்து வாய்த்துவிட்டது: இந்தக் காரணத்திற்காக அம்மொழி, எல்லோர் தலையிலும் ஏறுவதற்காக் காத்திருக்கிறது;

"ஒரு தலைமுறை வரையில்—அதற்குப் பிறகும்கூட, ஆங்கிலம் இல்லாமல் உலக விவகாரங்களோடு நாம் தொடர்பு கொள்ள முடியாது;

"விஞ்ஞானம் பெருகப் பெருக உலகத்தின் பரப்பளவு சுருங்கிக்கொண்டே வருகிறது; ஐயாயிரம், ஆறாயிரம் மைல்களெல்லாம் இப்பொழுது சில மணிநேர விவகாரமாகிவிட்டது;

"தேசியம் என்ற உணர்ச்சிகூட இந்தக் காலத்தில் 'சர்வதேசிய'மாகப் பெருகிவருகிறது; அங்ஙனம், சர்வதேசிய உணர்ச்சி பெருகிவரும் போது, சர்வதேசிய மொழியும் அத்தியாவசியமாகிறது; எனவே, ஆங்கில மொழி எப்பொழுதும்தேவைதான் என்பதை மறுப்பதற்கில்லை;

"ஆங்கில மொழி விசேட சிறப்புக்கொண்டது - என்று கூற முடியாவிட்டாலும், உலகத்தில் பெரும் பகுதியினர் ஆங்கிலத்தைத்தான் வழங்கிவருகின்றனர்; இந்தியாவுக்கு இந்தி எப்படி பெரும் பகுதியினர் மொழியாகிவிட்டதோ, அதுபோல உலகிற்கும் ஆங்கிலம் பெரும் பகுதியினரின் உத்தியோக மொழியாகிவிட்டது;

"இந்தியாவைப் பொறுத்த மட்டில் இந்தி மொழி ஆங்கிலத்தின் இடத்தைப் பெறுவதால், இந்தி மொழி அல்லாதாருக்குப் பெரும் தடைகள் ஏற்படத்தான் செய்யும்."

'தமிழருக்கு ஏன் இடமில்லை?'

'தோண்டியெடுக்கப்படும் புதை பொருள்கள் தமிழர்களின் நாகரீகத்தைக் கூறுகின்றனவே'

'சென்னை ஆட்சியினர் ஆலோசனையை மத்திய ஆட்சியினர் கேட்டனரா?'

'தமிழ்நாடு'கண்டன முழக்கம்

"இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட பழம் பொருள் ஆராய்ச்சி மத்திய ஆலோசனைக் குழுவில், ஒரு தமிழர்கூட இடம் பெறாதது வியப்பை அளிக்கிறது;

"தமிழர்களுடைய கலை, நாகரீகம், பண்பு முதலியன, பழம் பொருள் ஆராய்ச்சியாளர்களுக்குச் சுவைமிகத் தரும் துறையாகும்;

"இதுகாறும் வெளிவந்துள்ள பேராசிரியர்களின் நூல்கள், ஆராய்ச்சியின் சுவையை மிகுதியாக்கியுள்ளன;

"பழந் தமிழர்களுடைய நாகரீகம் எவ்வளவு புராதனமானது—என்பது, மேலும் ஆராய்ச்சி செய்வதற்குரியதாகும்;

"நாட்டின் சில பகுதிகளில் தோண்டியெடுக்கப்பட்ட புதை பொருள்கள், தமிழர்களின் நாகரீகத் தொன்மையை மேலும் மேலும் வற்புறுத்திக் கொண்டுவருகின்றன;

"இந்நிலையில், ஒரு தமிழரைக்கூட அம்மத்தியக் குழுவின் உறுப்பினராக நியமிக்காததின் காரணம் விளங்கவில்லை;

"குழு அமைக்கும்போது, இந்திய அரசாங்கம், சென்னை அரசாங்கத்தின் ஆலோசனையைக் கேட்டு அமைத்ததா என்பது புலப்படவில்லை;

"சென்னை பல்கலைக் கழகத்தையாவது, அண்ணாமலை பல்கலைக் கழகத்தையாவது கலந்து ஆலோசித்ததாகவும் தெரியவில்லை.

"இனியாவது,மத்திய ஆலோசனைக் குழுவில் தமிழரை உறுப்பினராகச் சேர்க்காத கவனக் குறைவை அரசாங்கம் உணர்ந்து, அக்குறையை விரைவில் நீக்க வேண்டுமென்று வற்புறுத்துகின்றோம்."

'தமிழ்நாடு உள்ளிட்ட திராவிடம்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மொழிகளாக ஆக்கியுள்ளனர்.

"ஜனநாயகத்திற்குப் பிறப்பிடம் என கூறப்படும் சுவிட்சர்லாந்தில் இந்தியதி எனில், இந்தியாவில் ஏன் இம்முறை கூடாது? ஆதலால், 'அதிகப்படியான மக்களால் இந்தி புரிந்து கொள்ளப்படுகிறது' என்கிற வாதம், இந்தியை ஆட்சி மொழியாக்குவதற்குப் பொருந்தாது. இந்தியைவிட வளமான பல மொழிகள் இந்தியத் துணைக் கண்டத்தில் வழக்கில் உள்ளன; ஆகவே, இந்தியைவிடப் பல துறையில் சிறப்புற்ற தமிழையும் ஆட்சி மொழியாக ஆக்கிக்கொள்ளலாமே!

"'இந்தி தேவையில்லை' என்பதோடு, இந்தியால் ஏற்படும் தீங்குகளையும் மனதில் கொள்ள வேண்டும். இந்தியைப் பொறுத்த மட்டில் திராவிடத்தில், தமிழகத்தைத் தவிர மற்ற இடங்களில் அவ்வளவு எதிர்ப்பு இல்லை என்பது உண்மையே. தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் ஒரு காலத்தில் தமிழிலிருந்து உண்டானவை என்ற உண்மையை, அம்மொழிகளைப் பேசுபவர்கள் இப்போது ஒப்புக்கொள்ளாவிட்டாலும், வடமொழிச் சொற்களை ஏராளமாகப் பெரும் அளவில் சேர்த்துக்கொண்டார்கள் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்; ஆனால், தமிழ் மொழி, கூடுமானவரையில் இன்னும் தனி மொழியாகவே இருக்கிறது என்பதைப் பெரும் அறிஞர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். இக்காரணங்களால், வடமொழியோடு தொடர்பு கொண்ட இந்தியை, கன்னடம், தெலுங்கு, மலையாளம் பேசுபவர்கள், தமிழ் மொழி பேசுபவர்களை விட தொல்லைக்குறைவோடு கற்றுக்கொள்ள இயலும்; ஆகவேதான், இந்தி இப்பகுதியில் எம்முறையிலும் புகுத்தப்படக் கூடாது என்று முப்பது ஆண்டு காலமாகவே பெரும் எதிர்ப்பு இருந்துவருகிறது.

"இந்தி மொழி, உத்தியோக மொழியாக்கப்பட்டால், வட இந்தியர்களின் அடிமைகளாகத்தான் நாம் இருக்கவேண்டி நேரிடும். மேலும், இன்று எப்படி, ஆட்சி மொழியான ஆங்கிலத்தைக் கற்றவர்கள்தான் சமுதாயத்தில் சிறப்பும், பெருமையும் உள்ளவர்களாகக் கருதப்படுகிறார்களோ—அதுபோலவேதான், இந்தி ஆட்சி மொழியாக ஆக்கப்பட்டால், இந்தியில் திறமையும், அறிவும் உள்ள வட இந்தியர்களே சமுதாயத்தில் சிறப்பும், பெருமையும் உடையவர்களாகக் கருதப்படுவார்கள். இந்நிலை ஏற்படுவதை எக்காரணம் கொண்டும் ஒப்புக்கொள்ளமாட்டோம்."

கைத்தறி நெசவாளர் வாழ்வுபெற....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோழர் என். வி. நடராசன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"திராவிட முன்னேற்றக் கழகம், எதிர்காலத்தில், ஏழை மக்களின்—தொழிலாளர்கள்—உழைப்பாளர் ஆட்சி நடைபெற வேண்டுமென்று விரும்புகிறது. இன்றைக்கு ஆட்சி பீடத்திலமர்ந்திருக்கும் காங்கிரசோ, தொழிலாளர்களுக்குத் தேவையான வசதிகளையும், நன்மைகளையும் செய்வதுதான் தங்களது வேலை என்று நாட்டிலே சொல்லி வருகிறது. ஆனால் காங்கிரஸ் சர்க்கார் உண்மையிலேயே நாட்டு மக்களுக்குச் செய்யும் நன்மை என்ன? ஒன்றுமே இல்லை; நாம் சர்க்காருக்கு எதிரானவர்கள் என்ற நிலையை மாற்றி நடுநிலைமை வகித்துப் பார்த்தாலும்கூட, 'இந்தச் சர்க்கார் நாட்டு மக்களின் நலனில் அக்கரை காட்டவில்லை—அவர்களது வாழ்வில் கவலை செலுத்தவில்லை' என்று குற்றஞ் சாட்ட வேண்டியவர்களாகத்தான் ஆகிறோம். நாட்டிலே இன்று, தொழிலாளர்களின் குறைகள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருவதைத்தான் நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோமே தவிர, எவ்வகையிலும் தீர்க்கப்படவே இல்லை; எனவே இனியாகிலும் தொழிலாளர்கள் பிரச்சினையில் போதிய அக்கரையும், கவனமும் செலுத்தி தொழிலாளர்கள் வாழ்க்கை நலனில் அக்கரைகொண்டு செயல்பட காமராசர் சர்க்கார் முன்வருமா?

"எந்த நேரத்திலாயினும் சரி, இந்த சர்க்கார், பாட்டாளி வர்க்கத்தவருக்கு—ஏழைத் தொழிலாளிகளுக்கு — அவர்களது பிரச்சினைகளைக் கவனிப்பதில் காலதாமதம் செய்து வருவதேன்? முன்னாலாவது வெள்ளையன் ஆண்டுகொண்டிருந்தான். அவன் அதுபோல் நடந்துகொண்டான் என்றால் ஆச்சரியம் ஒன்றுமில்லை;

"கைத்தறிநெசவாளர் பிரச்சினையில் சர்க்கார் கவலைகொண்டு அவர்கள் வாழ்க்கையின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் வரையில் தொழிலாளர்கள் என்றென்றும் கஷ்டப்பட்டுக் கொண்டேதான் இருக்கவேண்டுமா என்று கேட்கின்றனர். நிச்சயமாக முடியாதுதான். ஆனால் இன்று, அதனை நிலை நாட்டுவதற்கான சூழ்நிலை நமக்கு இல்லையே. அந்தச் சூழ்நிலை உருவாகும் வரையில் தொழிலாளர்கள் எப்படி வாழ முடியும்?

"அண்மையில் கூட, கடந்த நான்கு நாட்களாக, பிரதமர் பண்டித நேரு தாம் செய்த சுற்றுப்பயணத்தினால் சாதித்தது என்ன? கவனம் செலுத்திய பிரச்சினைகள் எவை எவை? காங்கிரஸ் கட்சிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். தங்களது வாழ்வையும் ஆர்வத்தையும் எந்தப் பாட்டாளி மக்கள் தங்கள் நாட்டின் சுயராஜ்யத்திற்காக ஈந்து அரும்பாடுபட்டு பணியாற்றினார்களோ, அந்தப்பாட்டாளி—தொழிலாளி மக்களின் இன்றைய நிலை என்ன என்ற எண்ணமே அவருக்கு எழவில்லை அவர்களைப் பற்றிய கவலையே அவருக்கிருக்கவில்லை. ஏழைகளின் பிரச்சினைகள் என்னென்ன என்பது பற்றி அவர் எதுவுமே கூறவில்லை. அவர்தான் கூறவில்லை என்றால், இந்த மாநில சர்க்காருக்காகிலும்—அந்தக் கவலை வேண்டாமா? ஆனால் இந்த மாநில சர்க்காருக்கும் அத்தொழிலாளர்கள் பற்றியக் கவலை ஒரு சிறிதுகூட இல்லை."

மேலும் தொடர்ந்து பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"பிரதமர் நேரு தமிழ் நாட்டுச் சுற்றுப்பயணத்தின்போது, அவர் சென்றவிடமெல்லாம் பிரமாதமான வரவேற்பு தரப்பட்டார். இந்தியாவின் பிரதமர் என்ற முறையிலே அவர் வரவேற்கப்பட வேண்டியவர்தான் என்பதை நாமும் ஒப்புக்கொள்கிறோம்.

"நேரு பண்டிதரின் வரவேற்பிற்காக பெருந்தொகை செலவழிக்கப்பட்ட அதே நேரத்தில், வடநாட்டில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், கைநெசவுத் தொழிலாளரின் அபிவிருத்திக்காக ரூ. 400 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதே போன்று சென்னை மாநிலத்திலும் உள்ள கை நெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கை நலனுக்காக ரூ. 8 கோடி மட்டுமே செலவிட முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம். முடிவு செய்யப்பட்டதே ரூ. 8 கோடி என்றால், சென்னை சர்க்காரின் கையில் கிடைக்க இருப்பது இன்னும் எத்தனை கோடி ரூபாய் குறைவாக இருக்குமோ? நிலப் பரப்பிலும், மக்கள் எண்ணிக்கையிலும் அதிகமான தென்னகத்திற்கு 'கொடுத்தோம் — கடமை தீர்ந்தது' என்று அலட்சியமாக மத்திய சர்க்கார் இருந்துவிடாமல், இந்த நாட்டு மக்களின் வாழ்க்கை நிலை உயர்வதற்கான வழிவகைகளைக் காணச் செய்ய காமராசர் சர்க்கார் டெல்லி சர்க்காரை வற்புறுத்த வேண்டும்."

மேலும் அவர் கூறினார் :—

"ஒவ்வொரு நாடும், தனது நலனுக்கான துறைகளில் ஈடுபட்டுப் பணியாற்ற தனி உரிமையும், அதிகாரமும் கொண்டதாக இருக்க வேண்டும். அதுபோலவே ஒவ்வொரு மாநிலமும் தனது சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்குத் தனி உரிமை கொண்டிருக்க வேண்டும்; அந்த உரிமை, அந்தந்த மக்களால் ஆளப்பட்டால் — ஆளப்படுவதாக இருந்தால்தான் கிடைக்கும். இந்த வாதம் எந்தப் பிரிவினருக்கும் தீது தராததாகும். அந்த முறையில் நாம் நமது சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளத் தேவையான அதிகாரம் கொண்டவர்களாக இல்லாமலிருப்பதினால்தான் நம்முடைய நிலை உயருவதற்கான பணியில் ஈடுபட இயலாதவர்களாக இருக்கிறோம். இதனையெல்லாம் கருதித்தான் நாம் திராவிட நாட்டுப் பிரிவினையை மிக வன்மையாக வலியுறுத்துகிறோம். எனவே, நம்மிடையே உள்ள கட்சி பேதங்களைப் பாராட்டாது, நமது நாட்டின் நலனுக்காக—நாட்டுமக்களின் வாழ்க்கைத்தரம் உயருவதற்காக நம்முடைய சுயதேவையைப்பூர்த்தி செய்வதற்கான அதிகாரத்தை நாமே கொண்டிருப்பதற்காக, நாட்டுப் பிரிவினையின் அவசியத்தை உணர்ந்து அதற்காகஒன்றுபட்டு உழைப்போம்.

"அதுமட்டுமல்ல; நாட்டில்உள்ள தொழிலாளர்கள் அத்தனை பேரிடையேயும் ஒற்றுமை நிலவ வேண்டும். ஒவ்வொரு துறையிலுமிருக்கும் தொழிலாளர்களெல்லோரும் ஒரு செயின்போல்—ஒரு வளையம்போல் ஒருவரையொருவர் ஒட்டிக்கொண்டு — தொடர்பு கொண்டுதான் வாழ முடியும். நாட்டில் உள்ள இரயில்வே தொழிலாளர்கள், தொழிற்சாலைத் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், நகரசுத்தித் தொழிலாளர்கள் போன்ற பற்பல துறைகளிலும் ஈடுபட்டுள்ளதொழிலாளர்களிடையே பிணைப்பு இல்லாவிட்டால் எப்படி மக்கள் சமுதாயம் வாழ முடியும்? எனவே, பல துறைத் தொழிலாளர்களும், சங்கிலிபோல் ஒருவருக்கொருவர் பின்னப்பட்டுக் கிடப்பதால்—அவர்களது பிரச்சினைகள் அனைத்தும் வளைவுபோல் தொடர்பு கொண்டிருப்பதால் நாம் எல்லோருமாக ஒன்றுபட்டு, நம்முடைய முயற்சியிலே ஊக்கமும், செயல் முறைகளிலே ஆக்கமும் பெற வேண்டும்."

சி. பி. சிற்றரசு

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் அடுத்து சொற்பொழிவாற்றினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

"சென்ற 1948-ம் ஆண்டில் ஆரம்பித்த கை நெசவுத் தொழிலாளர் சங்கம், இன்று ஒரு கட்சியின் சார்பில் நடக்கும் மாநில மாநாட்டிற்கு நிதி தரத்தக்க வகையிலே வளர்ந்துவிட்டது—அந்த அளவிற்குத் தயாராகிவிட்டது அது எவ்வளவு தொகை தருகிறது என்பதல்ல இங்கு பிரச்சினை—அதுபற்றி நமக்குக் கவலையும் இல்லை கடந்த 7 ஆண்டுகளுக்குள்ளாக அவர்கள் அடைந்த உயர்வைத்தான் நாம் கவனிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

"நாம், 'உயர்வு' என்று குறிப்பிடும்போது, அவர்கள் தங்கள் வாழ்க்கை வசதிகளில் முன்னேறிவிட்டார்கள்—'உயர்வு' அடைந்துவிட்டார்கள் என்பதல்ல பொருள்: அவர்கள் அந்தத் துறையில் இன்னும் 'உயர்வு' பெறவில்லைதான் ஆனாலும், 'நிதி' தரும் அளவிற்கு அவர்கள் உள்ள வளம் பெற்றுவிட்டார்கள்—'உள்ள உயர்வு' பெற்றிருக்கிறார்கள். 'திராவிட முன்னேற்ற கழகம் வளர்ந்தால், நிச்சயம் தங்கள் வாழ்வு நிலையும் உயர்வுறும்' என்ற நம்பிக்கை அவர்களது மனதிலே வேரூன்றிவிட்டது. அந்தப் பரந்த உள்ளப் பண்புடன் அவர்கள் நிதி சேர்த்து, நமக்குத் தங்கள் ஆதரவைத் தந்து, நம்மை ஊக்குவிக்கும் அவர்களுக்கு தி மு. கழகம் என்றென்றும் தலை வணங்கக் காத்துக் கொண்டிருக்கிறது; அவர்களது 'வாழ்வு உயர்வு'க்காகப் பாடுபட்டு வருகிறது.

"அந்த நாட்களிலே வாழ்ந்த நமது திராவிடர்கள் பிரிட்டிஷ் அரசி விக்டோரியா மகாராணியார் இங்கு வந்தபோது, 14 முழ நீளமுள்ள ஒரு சேலையை மடித்து ஒரு தீப்பெட்டியினுள் வைத்துப் பரிசாகக் கொடுத்தனர். 14 முழ நீள சேலையைச் சிறிய தீப்பெட்டியினுள் வைத்திருக்கக்கூடிய முறையில் மிக நுண்ணியதாகச் செய்யும் திறமையும் ஆற்றலும் கொண்டவர்களாகத்தான் இருந்தனர். ஆனால் இன்றோ, அந்நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. நம் பண்டைய நிலை சீரழிக்கப்பட்டதின் காரணம் வடநாட்டின் போட்டிதான். அந்தப் போட்டியைத் தடுத்திருக்க முற்பட்டிருக்கவேண்டும்; அல்லது அதனை எதிர்த்துப் போட்டியிடும் ஆற்றலையாவது வளர்த்திருக்க வேண்டும். ஆனால் அதுபற்றி எந்தவிதமான கவலையும் எடுத்துக் கொள்ளாமல் இருந்துவிட்டது இந்த சர்க்கார்.

"அண்மையில் பண்டித நேரு இங்கு வருகை தந்தபோது இந்த மாநில சர்க்கார், பிச்சைக்காரர்களையெல்லாம் ஒன்று திரட்டி, அவர்களை நேருவின் கண்களில் படச் செய்யக்கூடாது என்பதற்காகச் சிறைகளில் அடைத்தனர். இந்த மாநில சர்க்கார் உண்மையிலேயே கைநெசவுத் தொழிலாளர்களின் பிரச்சினையில அக்கரை கொண்டிருக்குமானால்—அவர்களது முன்னேற்றத்தில் கவலை எடுத்துக்கொண்டிருக்குமானால் அவர்களையெல்லாம் ஒன்று திரட்டி, நேரு பண்டிதரின் முன் நிறுத்தி, 'இதோ பாருங்கள்; இவர்களெல்லாரும்நெசவுத்தொழிலாளர்கள்; வேலையின்றி—வாழ்க்கைக்குரிய வாய்ப்புகளின்றி பிச்சைக்காரர்களானார்கள்; மனைவி மக்களை பட்டினியால் பரிதவிக்க விட்டுப் பார்த்திருக்கும் நிலை ஏற்பட்டு, தெருத் தெருவாகப் பிச்சை கேட்டுத் திரியும் அவல நிலைக்கு ஆளானவர்கள்' என்று கூறிக் காட்டியிருக்கவேண்டும். ஆனால் அப்படிச் செய்ததா?

"இந்த நாட்டை ஆளும் சர்க்கார் சிறிதும் ஈவிரக்கமற்ற சர்க்கார். கருணை உள்ளம் சிறிதும் கொண்டில்லாத சர்க்கார்; ஒரு உயிரையே அற்பமென மதிக்கும் அகங்காரம் பிடித்த சர்க்காராக இருக்கிறது."

இவ்வாறு, குறிப்பிட்டுவிட்டு மேலும் அவர் கூறினார்.

"ஐந்தாண்டுத் திட்டங்களில், தென்னாட்டின் அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான வசதிகள் இல்லை என்று கூறப்படுகிறது. ஏன் வசதிகள் இல்லை? வேண்டிய அளவுக்கு வசதிகள் இருக்கின்றன; ஆனால், செய்து தரும் எண்ணம்தான் இல்லை.

"நாம் நிச்சயமாக நமது நாட்டைப் பெற்றே தீருவோம் என்ற எண்ணம் வடநாட்டவரது மனதிலே வேரூன்ற ஆரம்பித்துவிட்டது. ஆகவேதான், 'என்றைக்காவது அவர்கள் நாட்டுப் பிரிவினை செய்துவிடுவார்களே; அதற்குள் நாமாக ஏன் அவர்களுக்கு இவற்றைச் செய்ய வேண்டும்?' என்ற அவர்களது ஒரே எண்ணத்தினால்தான் ஐந்தாண்டுத் திட்டங்களிலே, திராவிடம் புறக்கணிக்கப்படுகிறது.

"குடிக்கூலிக்குக் குடியிருக்கும் ஒருவன் தான் அதனைக்காலிசெய்ய இருக்கும் தருவாயில், அந்த வீட்டிற்கு வெள்ளையடிக்க முற்படுவானா? 'நாம்தான் காலி செய்ய இருக்கிறோமே? நமக்குப் பிறகு வருபவன் அதனைச் செய்துகொள்வானே?' என்று நினைப்பதுபோலத்தான் இன்றைய மத்திய சர்க்காரும் நினைக்கிறது.

"எந்த ஒரு பிறநாடும் நமது நாட்டின் மீது ஆதிக்கம் கொண்டிருந்தது என்பதற்கான வரலாறு இதுவரையிலும் கிடையாது. உலக சரித்திரத்தை நன்றாக அறிந்த பண்டிதர் முதல் சாதாரண ஆளும் கட்சியினர் வரையிலும், தங்கள் அதிகார மயக்கத்தில் இந்த வரலாற்று உண்மையை மறந்திருக்கலாம்; ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சாதாரணத் தொண்டன் வரையிலும் இந்த உண்மையை மறந்துவிடமாட்டார்கள்.

"காந்தி சென்ற புனிதப் பாதையிலேயே நாங்கள் செல்லுகிறோம் என்று காங்கிரசார் சொல்லி வருகின்றனர்—உண்மையிலேயே இன்றைய நிலை அதுதானா? காந்தியார் தாம் லண்டனுக்குச் செல்லப் புறப்பட்டதும் அவர் தாயார், தண்ணீர் குடிப்பதற்காக எடுத்துச் செல்லும்படி வெள்ளிக்கோப்பை ஒன்றைக் கொடுத்தார். ஆனால், அதை மறுத்து காந்தியார், 'இதை நான் எடுத்துச் சென்றால், அங்குள்ளவர்கள், இந்தியர்களெல்லாம் பெரும் பணக்காரர்கள் போலும்; தண்ணீர் குடிக்கப் பயன்படுத்தும் ஏனங்கள் வெள்ளியால் செய்யப்பட்டவைகள்தான்' என்று நினைத்து விடுவார்கள்; எனவே வேறு தகரக் கோப்பை ஏதாயினும் கொடுங்கள்' என்று கேட்டு வாங்கிச் சென்றிருக்கிறார். அப்படிப்பட்ட எளிய முறையிலா இன்றைய காங்கிரசாரும், அதன் ஆட்சி பீடத்தவரும் இருக்கிறார்கள்?

"எனவேதான் நாம் கூறுகிறோம் இந்த சர்க்கார், அந்நிய நாட்டு வெள்ளை சர்க்காரைப் போலவேதான் 'நிறம்' பிரித்து ஆளும் சர்க்காராக இருக்கிறது என்று குற்றம் சாட்டுகிறோம். நாட்டிலே சமுதாயக் கொடுமைகள், அரசியல் கொடுமைகள் கணக்கின்றி அதிகப்பட்டு விட்டன. அந்தக் கொடுமைகளைக் களைந்து முன்னேற்றத்திற்கான வழியில் பாடுபட—அதனைச் சரிப்படுத்தவேண்டியதுதான் ஆளும் சர்க்காரின் கடமை. ஆனால் அதைச் செய்ய இந்த சர்க்காரால் முடியவில்லை.

"இந்த சர்க்கார் முதலாளிகளின் கைப்பாவையாக இருந்து வருகிறது. முதலாளிகளுக்கும்—தொழிலாளர்களுக்குமிடையே ஏதாகிலும் தகராறு ஏற்பட்டால், சர்க்கார் முதலாளிகள் பக்கம்தான் நிற்பர். ஏனெனில், அது, தொழிலாளர்கள் பக்கம் நின்று முதலாளிகளை அதட்டிக் கேட்கும் சூழ்நிலை இழந்துவிட்ட ஒன்றாக இருக்கிறது. முதலாளிகளிடம் தனது மானத்தை விலைக்கு விற்றுவிட்டது; இந்த நிலையில், 'காங்கிரசால் மட்டும்தான் எல்லா வேலைகளையும் செய்ய முடியும்' என்றுகூடத் தம்பட்டமடித்துக் கொள்கிறார்கள்!

"அமெரிக்கா போன்ற பிற நாடுகளிலெல்லாம், எத்தனையோ மாநில சர்க்கார்களும், அவற்றை உள்ளடக்கிய மத்திய சர்க்காரும் இருந்துங்கூட, தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரேவிகிதத்தில்தான் ஊதியம் கொடுக்கப்படுகிறது. ஏன்இந்நாட்டில் மட்டும் மாநிலசர்க்காரில் வேலை செய்யும் தொழிலாளிக்கும் மத்திய சர்க்காரில் வேலை செய்யும் தொழிலாளிக்கும் கொடுக்கப்படும் ஊதியத்தில் பெரும் இடைவெளி இருக்கிறது? இப்படிச் செய்வது நியாயமா? மத்திய சர்க்காரில் வேலை செய்வதாலேயே ஒருவர் உயர்ந்தவராகவும், மாநில சர்க்காரில் வேலை செய்வதாலேயே தாழ்ந்தவராகவும் ஆகிவிட முடியுமா? எனவே நாம் இப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்கி நம்மிடையே ஒற்றுமையைப் பலப்படுத்துவதில் கவனஞ் செலுத்தவேண்டும். தொழில் துறையில் ஒருவருக்கொருவர் ஏற்படும் இன்னல்களுக்காகக் கண்ணீர் சிந்தி, தங்கள் சொந்த—தொழிலாளர்களின் நிலை உயர வெகுவாகப் பாடுபடவேண்டும்."

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன்

திருப்பத்தூர் (வ. ஆ.) வருகை

9—10—55 மாலை 6 மணிக்கு, திருப்பத்தூரில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, திருப்பத்தூர் தி. மு. கழகச் சார்பில் வரவேற்பு அளிக்கப்படும். அதுபோது, மாநில மாநாட்டுக்கு நிதி அளிக்கப்படும். தோழர் முல்லை சத்தி, மற்றும் பலர் பேசுவர்.

அன்று மாலை 5 மணிக்கு, திருப்பத்தூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளி ஜகதீசன் நினைவு மண்டபத்தில், நகரசபைத் தலைவர் திரு. வி. எஸ். வீரபத்திரன் அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை பாராட்டி, துணைத் தலைவர் ஜனாப் எம். எம். அப்துல் ஹக் அவர்களால் வரவேற்பு இதழ் வாசித்து அளிக்கப்படும்.

சென்னை 11-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு

9—10—55 காலை 10 மணிக்கு, சென்னை 11-வது வட்ட தி மு கழக பொது உறுப்பினர் கூட்டம், சென்னை, எண் 4/88-ஏ, பிராட்வே ரோடில் உள்ள கழகப் பணிமனையில் நடைபெறும்.

பாராட்டுக் கூட்டம்

அண்மையில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில், (46-வது வட்டத்தில், உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தோழர் டி. எம். சண்முகம் அவர்களைப் பாராட்டி, 9—10—55 மாலை 6 மணிக்கு, சென்னை, தேனாம்பேட்டை போலீஸ் நிலைய எதிரில் தோழர் கபாலி தலைமையில், தோழர் கண்ணதாசன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசுவர்.

குறள் வகுப்பு

9—10—55 காலை 9 மணிக்கு, திருச்சி, எண் 1, பெரிய செட்டித் தெரு, பாண்டியன் படிப்பக மனையில், திரு. தி. ரா. தருமராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.